**கோவை மாவட்ட நிலஅளவை பதிவேடுகள் துறை உதவி இயக்குநர் மற்றும் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் அவர்களின் செயல்முறை ஆணைகள்**

**பிறப்பிப்பவர்: திரு.ந.கோபாலகிருஷ்ணா**

**ந.க.அ6/ 2635/2023** **நாள்: 25.04.2023**

பொருள்: பொதுப்பணிகள் – நில அளவைப்பதிவேடுகள் துறை- கோவை மாவட்டம்- கருணை அடிப்படையில் பணி நியமனம்- காலஞ்சென்ற உதவியாளர் அ.ஜான்சன் ஜோதிகுமார் என்பவரின் வாரிசுதாரரும் மனைவியுமாகிய திருமதி.சு.எஸ்தர்ராணி என்பவருக்கு கருணையின் அடிப்படையில் தற்காலிகமாக இளநிலை உதவியாளராக நியமனம் செய்து ஆணைகள் வழங்கியது- பணியேற்ற நாள் முதல் பணிவரன் முறை செய்து உத்தரவிடுதல் – தொடர்பாக.

பார்வை:
1. திருமதி.சு.எஸ்தர் ராணி , காலஞ்சென்ற உதவியாளர் - அ.ஜான்சன் ஜோதிகுமார் என்பவரின் மனைவி மனு நாள்: 08.12.2020.
2. திருப்பூர் மாவட்ட நில அளவை அலுவலகம் உதவி இயக்குநரின் கடித எண் ந.க அ1/ 6103 / 2020 நாள்: 02.08.2021.
3. சென்னை நில அளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநரது ந.க ரி1 / 17853 / 2021 நாள்: (நி.அ) நாள் 24.11.2021
4. அரசாணை (நிலை) எண் 18 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை நாள் 23.01.2020
5. அரசாணை (நிலை) எண் 248 நிதி (CMPC) துறை நாள் 20.05.2020
6. அரசாணை (நிலை) எண் 382 நிதி (CMPC) துறை நாள் 24.10.2020
7. இவ்வலுவலக செயல்முறை ஆணை எண் ந.க எண் அ4 / 6968/2021 நாள் 05.04.2022
8. திருமதி.சு.எஸ்தர் ராணி என்பவரது பணியேற்பு அறிக்கை நாள் : 07.04.2022
9. இவ்வலுவலக ந.க எண் அ6 / 6968 / 2021 நாள்: 11.08.2022
10. அரசாணை (3டி) எண் 32 வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை பணிகள் அலகு, பணி -9(2) பிரிவு நாள் : 03.03.2023

-----

**ஆணை:**

பார்வை 3 மற்றும் 7- ல் காணும் ஆணைகளின் படி, கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக தற்காலிகமாக பணி நியமனம் பெற்று , பார்வை -8 ல் காணும் பணியேற்பு அறிக்கையின் படி இவ்வலுவலக கட்டுப்பாட்டில் 07.04.2022 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக பணியேற்று பணிபுரிந்து வரும் திருமதி.சு.எஸ்தர் ராணி என்பவருக்கு பார்வை -10 –ல் காணும் அரசாணையின் படி தனியர் இளநிலை உதவியாளராக பணியேற்ற நாளான 07.04.2022 முற்பகல் முதல் தனியரது பணியினை இளநிலை உதவியாளர் இனத்தில் பணிவரன்முறை செய்து இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

25/4/2023

உதவி இயக்குநர்

நிலஅளவை பதிவேடுகள் துறை

கோவை

25/4/23

பெறுநர்

திருமதி.சு.எஸ்தர் ராணி,
இளநிலை உதவியாளர்,
மாவட்ட நிலஅளவை அலுவலகம்,
கோவை. (கண்காணிப்பாளர் மூலமாக)

நகல் : இயக்குநர், நிலஅளவை மற்றும் நிலவரித்திட்டம் , சென்னை – 5.
(பணிந்தனுப்பப்படுகிறது)

நகல் : மண்டல துணை இயக்குநர், நிலஅளவை பதிவேடுகள் துறை, கோவை – 18.
(பணிந்தனுப்பப்படுகிறது)

நகல்: கண்காணிப்பாளர் 1, 2

நகல்: அ3 இருக்கைக்கு

உபரி : 2